**OS.No.6/2021 P.W.1-ராமசந்திரன் 10.04.2026**

<u>**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**</u>

நான் ஏற்கனவே குறுக்கு விசாரணை சாட்சியத்தில் வங்கி கணக்கு ஆரம்பித்ததாக கூறியுள்ள நிலையில் அவ்வாறு வங்கி கணக்கு ஆரம்பித்தேனா என்றால் அதை ஆரம்பித்து முடிவுக்கு கொண்டு வந்து விட்டேன். நான் ஏன் மேற்படி வங்கி கணக்கை முடிவுக்கு கொண்டு வந்தேன் என்றால் வங்கியில் உள்ள சட்டக்குழு (Legal Team) என்னை விசாரித்தார்கள். Indemnity பாண்டு கேட்டு நான் கொடுக்காததாலும், வாரிசு சான்று கேட்டு கொடுக்காததாலும், வைப்பீடு தொகையை எனக்கு கொடுப்பதில் காலதாமதம் ஏற்படுத்தியதால் நான் வங்கி கணக்கை முடிவுக்கு கொண்டு வந்தேன். எனது வங்கி கணக்கில் ரூ.50,00,000/- இருக்கும் விவரம் எனக்கு உறவினர்களுக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு வங்கி கணக்கில் ரூபாய் 50 லட்சம் பணம் உள்ளது என்றும், நான் வங்கியை அனுகி மேற்படி ரூபாய் 50 லட்சத்தை எனது வங்கி கணக்கிற்கு மாற்ற சொன்னேன் என்றும் சொன்னால் சரியல்ல. இறந்துபோன ரங்கநாதன் படிவம் பூர்த்தி செய்த போது நான் சொல்ல, சொல்ல படிவத்தை பூர்த்தி செய்தாரா என்றால் இல்லை. ரங்கநாதன் அவ்வாறு படிவத்தை பூர்த்தி செய்த போது யார், யார் உடனிருந்தார்கள் என்றால் சாலிகிராமம் வங்கி மேலாளார் மட்டும் தான் உடனிருந்தார். ரங்கநாதனை பாதுகாக்கும் நபர் (caretaker) உடனிருந்தாரா என்றால் அது பற்றி தெரியாது. ரங்கநாதன் இறந்த பின்னர் உறவினர் அனைவரும் சேர்ந்து தான் அவரது ஈமசடங்கை செய்தோம் என்றால் சரிதான். அவரது ஈமசடங்கு முடிந்த பின்னர் அவரது சொத்து குறித்து யாரும் பேசவில்லை என்றால் சரிதான். நானும் மேற்படி ரூபாய் 50 லட்சம் குறித்து யாரிடமும் பேசவில்லை என்றால் பேசியதாக நினைவில்லை. உறவினர்கள் சொத்து குறித்து பேசிய போது நான் அவர்களிடம் ரங்கநாதனுக்கு சொத்து எதுவும் இல்லை என்றும், அவரே செலவழித்து விட்டார் என்றும் கூறினேன் என்றால் சரியல்ல. ரங்கநாதனின் ஈமசடங்கிற்கு யார் செலவு செய்தார்கள் என்றால் நான் தான் செய்தேன். ரங்கநாதன் ரூபாய் 50 லட்சத்தை வைப்பீடு செய்தது உண்மை என்றும், ஆனால் அவர் என்னை நாமினியாக நியமித்திருக்க வாய்ப்பில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

(நேரமின்மையால் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)